மார்ச் 2023

# 5 மகிழ்ச்சி மிகுந்த முதியவர்களுக்கான செய்திமடல்

**'மாறிவரும் உலகில்**
**மீள் உய்க்கை மிக்க மூத்த பிரஜைகள்'**

சர்வதேச முதியோர் தினம்

1 ஒக்டோபர் 2022



## பின்னணி

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதி சர்வதேச முதியோர் தினமாக பிரகடனப்படுத்தியது. இந்த நாள் முதியவர்களைக் கௌரவிப்பதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

மூத்த பிரஜைகளானவர்கள் சமூதாயத்தில் பொறுப்புக்கூறக்கூடிய தலைவர்களாவர். மூத்த பிரஜைகளானவர்கள் சமூகத்தின் பாரம்பரியங்களையும் கலாச்சாரங்களையும் எடுத்துச் செல்வதோடு மற்றும் இளைய தலைமுறையினருக்கு அறிவை வழங்குகிறார்கள். இந்த நாளில் மூத்த பிரஜைகளின் முக்கியத்துவம், பங்களிப்பு போன்றவற்றினைப் பாராட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கொண்டாடப்படுகின்றது.

## நடவடிக்கைகளின் சுருக்கம்

- ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 01 ஆம் திகதி சர்வதேச முதியோர் தினம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தால் கொண்டாடப்படுகிறது.
- சர்வதேச முதியோர் தினம் 6 வது மாடியில் உள்ள செத்சிறிபாய பத்தரமுல்லையில் இடம்பெற்றது.
- இதில் முதியோர் நலன்புரிக்கான ' முதியோர் சுவசரண ' எனும் காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இலங்கையின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி சமய நிகழ்வுகள் இடம்பெற்றது.
- மாதிவலயில் அமைந்துள்ள இயம்போறுவ ரஜமஹ விகாரஸ்தானத்தில் இடம்பெற்ற சமய நிகழ்வில் முதியோர்களுக்கான தேசிய செயலக உத்தியோகத்தர்கள், முதியோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் அலுவலகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.
- சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஊடக நிகழ்ச்சிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.





# நல்ல செயல்பாடுகளுக்கு அறிமுகம்

## சுகாதார காப்புறுதித் திட்டங்கள் அறிமுகம்

சர்வதேச முதியோர் தினம் அன்று 'முதியோர் சுவசரண ' எனும் பெயரை உடைய காப்புறுதித் திட்டமானது இலங்கையிலுள்ள முதியோர்களின் நலன்புரியினை மேம்படுத்துவதனை நோக்கமாகக் அறிமுகப்பட்டது.

- இச் சுகாதார கப்புறுதித் திட்டமானமது இலங்கையின் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் நடைமுறைப்படுத்துகின்றது.
- சர்வதேச முதியோர் தினம் 01 ஆம் திகதி ஒக்டோபர் 2022 ஆம் வருடம் செத்சிறிபாய, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள பெண்கள், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
- பெண்கள், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.
- முதியோர்களுக்கான தேசிய பேரவையின் உறுப்பினர்கள், மேல்மாகாண முதியோர் சங்கத்தின் பிரதிநிதிகள், கொழும்பு மாவட்ட முதியோர் சங்கத்தின் தவிசாளர் மற்றும் பொருளாளர்கள் உட்பட சகலரும் பங்குபற்றினர்.
- இந்த நிகழ்ச்சியில் இருபத்தைந்து முதியோர்களும் கலந்து கொண்டனர்.





## உளநல மற்றும் ஆத்மீக நிகழ்வுகள் இடம்பெற்றன

முதியோர்கள் நாட்டில் தற்போது இடம்பெற்றுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளர். இதனால் அவர்களின் உளநிலையில் பாரிய தாக்கம் செலத்தியுள்ளது.. இதனால் இவர்களின் ஆரோக்கியத்தினை முன்னுரிமைப்படுத்தி பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றன.

- 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி பி.ப 4.00 தொடக்கம் 5.00 மணி வரை இடம்பெற்ற இப் பூஜை நிகழ்வில் கௌரவ அமைச்சர் மற்றும் முதியோர்களுக்கான தேசிய பேரவையின் முக்கிய பிரதிநிதிகளும் பங்குபற்றினார்கள்.



- மாதிவலயிலுள்ள ஈயம்போறுவ விகாரஸ்தானத்தில் இடம்பெற்ற சமய நிகழ்வில் கொழும்பு மாவட்ட செயலாளர் மற்றும் மஹரகம பிரதேச செயலாளர் உட்பட சுமார் 150 முதியோர்களும் மற்றும் 250 முக்கிய சமூதாயப் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களும் பங்குபற்றினார்கள்.
- இந் நிகழ்வில் பங்குபற்றுவதற்காக கிராமிய முதியோர் சங்கதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதியோர்கள் வரவழைக்கப்பட்டனர்.



## துறையில் இருந்து செய்திகள்

முதியோர் சமூகத்தினர் நாட்டுக்கு மிக முக்கியமான வளம் என்பதோடு. முதியோர் சனத்தொகையானது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், இலங்கைக்கு நீண்டகால நலன்புரி ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. கடந்த காலத்தில் முதியோர்களை மிகவும் அச்சுறுத்திய கொவிட் நோய்த் தொற்றினால் முதியோர்கள் மிகவும் பாதிப்புற்றனர். மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, முதியவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனவே, முதியோர்களை பொருளாதார ரீதியாகவும், மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், ஆத்மீக ரீதியாகவும் வலுப்படுத்த உதவுவது நமது கடமையாகும்.



அஸ்ரி அபூபக்கர்
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
செத்சிறிபாய, பத்தரமுல்லை

வயதைப் பொறுத்த வரையில் முதியோர்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பலவீனமடைகிறார்கள். சர்வதேச முதியோர் தினத்தை கொண்டாடுவது முதியவர்களுக்காக நாம் என்ன பொறுப்புகளைச் சுமக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. முதியோர்களுக்கான தேசிய செயலகத்தால் இதுபோன்ற திட்டங்களைத் தொடங்குவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்."



சகுந்தலா மஞ்சநாயக
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
செத்சிறிபாய, பத்தரமுல்லை

## ஆசிரியர் செய்தி

சர்வதேச முதியோர் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 1 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. சில சமயங்களில் சமுதாயத்தால் புறக்கணிக்கப்படும் வயதான சமூதாயத்தினரின் முக்கியத்துவத்தை இந்த நாளில் கௌரவப்படுதுவது ஈர்க்கிறது. முதியோர்கள் தங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ்வதற்கு நாம் செய்ய வேண்டிய பொறுப்புகளை இந்த நாள் வலியுறுத்துகிறது. முதியோர்களை பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பாராட்டுவதும் இந்த நாளின் முக்கிய நோக்கங்களாகும். அவர்களுக்கு நீண்ட கால பராமரிப்பு வழங்குவதும் அவர்களின் ஆரோக்கியமான முதுமைக்கு பங்களிப்பதும் நமது பொறுப்பு. முதியோர்களுக்கான தேசிய செயலகம் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவது மிகவும் பாராட்டுக்குரியது.



சந்துனி ஜயரத்ன
திட்ட அலுவலர்
ஜைக்கா செயல் திட்டம்

உங்கள் சமூகத்தில் நல்ல வேலைக்கான உதாரணங்களை அனுப்பவும்
jica.processes@gmail.com

இளைஞர்கள், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் இயக்குநரகம், சுகாதார அமைச்சகம்
முதியோருக்கான தேசிய செயலகம், சமூக வலுவூட்டல் அமைச்சகம்
ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) சமூகத்தில் முதியோர் சேவையின் திறனை மேம்படுத்துவதற்கான திட்டம்

திட்ட அலுவலகம்
முதியோர்களுக்கான தேசிய செயலகம் (NSE)
முகவரி: D பிளாக், 2 வது மாடி, செட்ஷிரிபாய கட்டடம் (II), பத்தரமுல்ல, கொழும்பு
மின்னஞ்சல்: jica.procees@gmail.com

Ministry of Health